Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.39/2023**

**2024-ம் ஆண்டு மே மாதம் 29-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின்**
**அ.சா. 07 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**
**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 07 | தொழில் | - | எஸ்டேட் வேலை |
| பெயர் | - | காளியம்மாள் | வட்டம் | - | |
| க/பெ | - | சுரேஷ் | சமயம் | - | |
| கிராமம் | - | பச்சமலை | வயது | - | 42 |
| சாதி | - | | | | |

**<u>29.05.2024</u>**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் பச்சமலையில் வசித்து எஸ்டேட் வேலை செய்து வருகிறேன். கடந்த 19.01.2023 அன்று எனது மகன் மகேஷ் அவரது நண்பர்களோடு ஸ்கூட்டி பைக்கில் சிறுகுன்றாவிற்கு சென்ற போது எனது மகன் மகேஷ் இருசக்கர வாகனத்தை பெட்ரோல் பல்க் வரை ஓட்டிச் சென்றுள்ளான். அதன் பிறகு அவரது நண்பனாகிய ஆஜர் எதிரி அப்பு (எ) மணிகண்டன் அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றுள்ளார். ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தை ஸ்பீடாக ஓட்டிச் சென்றதால் எனது மகன் மகேஷ் ஸ்கிட்டாகி கீழே விழுந்துள்ளார். எனக்கு செய்தித்தாள் ரிப்போர்ட்டர் மூலம் தகவல் கிடைத்து நான் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். நான் பார்க்கும் போது எனது மகன் கண்ணத்திலும் காலிலும், பின் தலையிலும் காயங்கள் இருந்தது. மருத்துவர் உயிர் நிலையில் அடிப்பட்டு இருந்ததால் எனது மகன் இறந்துவிட்டதாக கூறினார். போலீசார் என்னிடம் என் மகனை அடையாளம் காட்ட சென்னார்கள். அடையாளம் காட்டினேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாகனத்தை வேகமாக ஓட்டிச் சென்றார்களா, மெதுவாக ஓட்டிச் சென்றார்களா என்றும் யார் ஓட்டிச் சென்றார் என்றும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** : இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.39/2023**

**2024-ம் ஆண்டு மே மாதம் 29-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 08 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 08 | தொழில் | - | உண்டு உறைவிட பள்ளி (கணினி ஆசிரியர்) |
| பெயர் | - | ஜெயஸ்ரீ | வட்டம் | - | |
| க/பெ | - | பாரத் | சமயம் | - | |
| கிராமம் | - | பச்சமலை | வயது | - | 30 |
| சாதி | - | | | | |

**29.05.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் வால்பாறையில் உள்ள உண்டு உறைவிட பள்ளியில் கணினி ஆசிரியராக பணி செய்து வருகிறேன். அ.சா.7 காளியம்மாள் எனது உடன்பிறந்த சகோதரி ஆவார். கடந்த 19.01.2023 அன்று எனது அக்கா மகன் மகேஷ் அவரது நண்பர்களோடு இருசக்கர வாகனத்தில் செல்லும் போது விபத்து ஏற்பட்டு வால்பாறை அரசு மருத்துவமனையில் இருப்பதாக கேள்விப்பட்டு அங்கு நானும் எனது அக்காவும் எனது உறவினர்களும் சென்று பார்த்தோம். மகேஷ்க்கு தலை மற்றும் கால்களில் அடிப்பட்டு இறந்திருந்தார். போலீசார் அவரை அடையாளம் காட்ட சொன்னார்கள். நாங்கள் அடையாளம் காட்டினோம். பின்பு போலீசார் மேல் நடவடிக்கைகளை முடித்து பிரேதத்தை எங்களிடம் ஒப்படைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரிலிருந்து குறுக்கு விசாரணை இல்லை என்றார்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.39/2023**

**2024-ம் ஆண்டு மே மாதம் 29-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா. 09 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 09 | தொழில் | - | பிட்டிங் வேலை |
| பெயர் | - | ஜெயகணேஷ் | வட்டம் | - | |
| த/பெ | - | சமுத்திரம் | சமயம் | - | |
| கிராமம் | - | பச்சமலை | வயது | - | 40 |
| சாதி | - | | | | |

**29.05.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் பச்சமலையில் வசித்து பிட்டிங் வேலை செய்து வருகிறேன். அ.சா-7 காளியம்மாள் எனது அக்கா. அ.சா.8 எனது தங்கை ஆவார். கடந்த 19.01.2023 அன்று எனது அக்கா காளியம்மாள் எனக்கு போன் செய்து அவரது மகன் மகேஷ்க்கு இருசக்கர வாகனத்தில் செல்லும் போது விபத்து ஏற்பட்டதாகவும், அதனால் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு வருமாறு சொன்னார். நான் அங்கு சென்ற போது அவருக்கு தலையில் அடிபட்டு இறந்திருந்தார். போலீசார் பிரேதத்தை அடையாளம் காட்ட சொன்னார்கள். அடையாளம் காட்டினோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரிலிருந்து குறுக்கு விசாரணை இல்லை என்றார்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.